செ.வெ.எண்: 36 நாள்: 18.10.2016

## பத்திரிகைச்செய்தி

புதுக்கோட்டை மாவட்ட, தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான இரண்டாவது அரையாண்டுக் கூட்டம் மற்றும் மூன்றாவது காலாண்டுக் கூட்டம் - 24.10.2016 அன்று மாலை 4.30 மணிக்கு மாவட்ட நுகர்வோர் குழுவின் தலைவராகிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டத்தில் மாவட்ட அளவிலான நுகர்வோர் சம்மந்தப்பட்ட, கீழ்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

1. காலாவதியான உணவுப்பொருள் மற்றும் கலப்பட உணவுப் பொருட்கள் விற்பனை செய்வதை தடுக்க ஆலோசனை வழங்குதல்.
2. பொதுவிநியோகத் திட்டச் செயல்பாட்டினை மேம்பாடு செய்தல்.
3. இதர நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனை வழங்குதல்.

மேற்படி கூட்டத்தில் மாவட்ட நுகர்வோர் குழுவினர், வட்ட அளவிலான நுகர்வோர் குழுவினர், தன்னார்வ நுகர்வோர் குழு அமைப்பினர் ஆகியோர் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை தெரிவிக்கலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**